வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 07   22.04.2026 புதன்கிழமை   இதழ் : 106   பக்கங்கள் : 08

## பாதிப்புற்ற குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருப்பது கவலை!

**ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆண்ட்ரே பிரெஞ்ச்**


கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்று 7 ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருப்பது கவலைக்குரியது என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தெரிவித்தார். 07




## நீதி நிலைநாட்டுவதில் அசமந்தம் தொடர்ந்தால் சர்வதேச விசாரணை கோருவதே சரியான வழி!

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நினைவு நாளில் பேராயர் மல்கம்



கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்று ஏழு வருட நிறைவடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டும் விடயத்தில் அரசாங்கம் அசமந்தப்போக்குடன் செயற்பட்டால், சர்வதேச விசாரணையை கோருவதே சரியான வழி என கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்று ஏழு வருட நிறைவை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்ற விசேட நினைவேந்தல் மற்றும் ஆராதனை நிகழ்வில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் 07

## வடக்கு - கிழக்கு தமிழ் கட்சிகளை ஒழுங்குக்கு கொண்டு வாருங்கள்!

**தமிழரசுவிடம் கோரியது இந்தியா**

யாழ்ப்பாணம், ஏப். 22

வடக்கு - கிழக்கு தமிழர்கள் மத்தியில் கட்சிகள் அதிகரித்துவிட்டன. அதனை ஓரளவுக்கு ஒழுங்குக்கு கொண்டு வாருங்கள் என இந்திய துணை ஜனாதிபதி தம்மிடம் வலியுறுத்தினார் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சிகள் அதிகரித்து விட்டன. ஓரளவுக்கு இதனை ஒழுங்குக்கு கொண்டு வாருங்கள் என இந்திய துணை ஜனாதிபதி இராதா கிருஷ்ணன், 07

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்
## உண்மையான குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகின்றார்கள்!

**விசாரணை குறித்து நாமல் விசனம்**

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் அரசியல்மயமாக்குவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், பாரபட்சமான நடவடிக்கை மற்றும் தவறான பழி சுமத்தல் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு நெலும் மாவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் ஊடகவியலாளர்கள் 07

## பரந்தன் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கார் மோதியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு 7.00 மணியளவில் பரந்தன் சந்திக்கு அண்மையில் வீதியை குறுக்காக கடக்க முற்பட்டவர் மீது குறித்த கார் மோதியது.

விபத்தில் 07

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி சுதந்திரமாக நாடமாடுகிறார்!

**ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம்பெற்று ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், அதன் சூத்திரதாரி இன்னும் சுதந்திரமாகவே நடமாடுகின்றார். ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும், அதன் சூத்திரதாரியைக் கண்டுபிடிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்களும் இன்று மௌனம் காப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற 07

## மாகாணத் தேர்தலை நடத்த அச்சப்படுகிறது அநுர அரசு!

**கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு**



கொழும்பு, ஏப். 22

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சப்படுகிறது என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். 07

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் செம்மணிக்கான வருகை ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 22

செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியை நேற்று செவ்வாய்க்கிழமை பார்வையிடவிருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், தமது விஜயத்தை அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் திகதி வரை ஒத்திவைத்துள்ளனர்.

செம்மணி புதைகுழிப் பகுதியை நேரில் பார்வையிட ஐரோப்பிய ஒன்றியக் குழுவினருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. எனினும், தற்போது களத்தில் அகழ்வுப் பணிகள் நடைபெறாத காரணத்தால், நேற்று அவர்கள் வருகை தரவில்லை. 07

## கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு பின்னாலுள்ள காணிக்குள் கஞ்சா மீட்பு!



யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையம் ஒன்றின் பிற்பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்குள் இருந்து 10 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் 07

## பிரேமலால் ஜயசேகர கைது!

கொழும்பு, ஏப். 22

இரத்தினபுரி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி), அனுமதிப்பத்திரம் இல்லாத கைத்துப்பாக்கியுடன் நுவரெலியா பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

குடும்ப உறவினர்களுடன் நுவரெலியாவுக்கு சென்றிருந்த பிரேமலால் ஜயசேகரவுக்கும், அவிசாவளையிலிருந்து அங்கு சுற்றுலா வந்திருந்த ஒரு குழுவினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, பிரேமலால் ஜயசேகர தனது கைத்துப்பாக்கியைக் காட்டி அந்தத் தரப்பினரை அச்சுறுத்தியதாக நுவரெலியா பொலிஸாருக்குக் 07

## போதைப்பொருள் வியாபாரி உள்ளிட்ட 3 பேர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருள் வியாபாரி உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அளவெட்டி பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்து சோதனையிட்டபோது , அவர்களின் உடைமையில் இருந்து ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செம்மணி புதைகுழியின் 3 ஆம் கட்ட அகழ்வு பணி 27ஆம் திகதி ஆரம்பம்!

## இதுவரை 240 மனித என்பு எச்சங்கள் அடையாளம்



யாழ்ப்பாணம், ஏப். 22

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் இதுவரை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேலும் எலும்புக்கூடுகள் அப்பகுதிகளில் காணப்படுவதால் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவேண்டும் எனவும், அதற்காக 08 வார கால பகுதி தேவை என சட்ட வைத்திய அதிகாரி மன்றில் விண்ணப்பம் செய்ததற்கு அமைவாக மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் பருவமழை மற்றும் காலநிலை சீரின்மை காரணமாக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டதுடன், புதைகுழிக்குள் மழை வெள்ளமும் நிறைந்து காணப்பட்டது.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 45 நாட்கள் முன்னெடுக்கப்பட்டு செப்ரெம்பர் 06ஆம் திகதியுடன் நிறைவு பெற்ற நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் தற்போது சுமார் 08 மாத கால பகுதிக்கு பின்னர் மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, 27ஆம் திகதி அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் இன்று புதன்கிழமை , யாழ்,நீதவான் நீதிமன்றில் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போலி வங்கி இணையத்தளத்தை உருவாக்கி நிதி மோசடியில் ஈடுபட்ட இளைஞர் சிக்கினார்!

கொழும்பு, ஏப். 22

தனியார் வங்கியொன்றின் இணையத்தளத்தை ஒத்த போலியான இணையத்தளத்தை உருவாக்கி, நிதி மோசடியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவங்கொட பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பத்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கணினி குற்றத் தடுப்பு பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் கடத்தல் இந்தியப் பிரஜை கைதானார்!

கொழும்பு, ஏப். 22

ஒரு கிலோ கிராமுக்கும் அதிகம் எடை கொண்ட குஷ் போதைப்பொருளை நாட்டுக்குள் கடத்த முயன்ற இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை சுங்க மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் இணைந்து நடத்திய கூட்டு நடவடிக்கையின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் 35 வயதான இந்திய நாட்டவர் என பொலிஸ் அடையாளம் கண்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க நான் தயார்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அறிவிப்பு



கொழும்பு, ஏப். 22

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று சிறிது காலமே நாங்கள் ஆட்சியில் இருந்தோம். அதன் பின்னர் ஆட்சியும் மாறிவிட்டது. அந்தச் சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாவது அரசாங்கமே தற்போது ஆட்சியிலிருக்கிறது. அதனால் யாராவது விசாரணைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வார்களாக இருந்தால் அது சிறந்ததாக இருக்கும். முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் அதற்கான முழு ஒத்துழைப்பையும் இந்த அரசாங்கத்துக்கு வழங்குவேன்" என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் அறிந்த வகையில் ஆட்சியிலிருந்து ஒவ்வொரு அரசாங்கத்திலும் திருடர்கள் இருந்தார்கள். மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றையும் நியமித்திருந்தேன். உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் அந்த விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருந்தேன். எனது ஆட்சிக் காலத்தில் அந்த விசாரணைகள் முறையாக இடம்பெற்றிருந்தன. அதன் பின்னர் எதுவும் இடம்பெற்றதாக தெரியவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று சிறிது காலமே நாங்கள் ஆட்சியில் இருந்தோம். அதன் பின்னர் ஆட்சியும் மாறிவிட்டது. அந்தச் சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாவது அரசாங்கமே தற்போது ஆட்சியில் இருக்கிறது. அதனால் யாராவது விசாரணைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வார்களாக இருந்தால் அது சிறந்ததாக இருக்கும். முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் அதற்கான முழு ஒத்துழைப்பையும் இந்த அரசாங்கத்துக்கு வழங்குவேன். பிரதான சூத்திரதாரிகளை இன்னும் தேடிக்கொண்டே இருக்கிறார்கள்-என்றார். (அ)

# மத்திய கிழக்கு போரால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் பாதிப்பு

## ஐ.நா. அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஏப். 22

அமெரிக்கா ஈரான் போரின் காரணமாக இலங்கைக்கு ஒரு வாரத்துக்கு 1,015 மில்லியன் அமெரிக்க டொலர் (310 கோடி ரூபா வரை) தேயிலை ஏற்றுமதி வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் யுத்தத்தின் காரணமாக ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டமை மற்றும் மத்திய கிழக்கு விமான போக்குவரத்து எல்லை வரையறுக்கப்பட்டமை காரணமாக அதிக அச்சுறுத்தல் ஏற்படும் நாடுகளுக்கிடையில் இலங்கை முக்கிய இடம் வகிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

36 ஆசிய மற்றும் பசுபிக் வலய நாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிக பாதிப்பு தெற்காசிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் ஈரான் போர் காரணமாக தெற்காசியாவின் பொருளாதாரத்துக்கு 183 பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்படலாம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று அமெரிக்கா ஈரான் போர் காரணமாக நாட்டுக்கு கிடைக்கும் வெளிநாட்டு நிதி அனுப்பும் செயன்முறை எச்சரிக்கை நிலையை சந்தித்துள்ளது என்றும் கடந்த வருடம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ள இலங்கையர்கள் 80.2 வீதமானவர்கள் தொழில்வாய்ப்புக்காக மத்தியக் கிழக்கு நாடுகளுக்கே சென்றுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் ஒரு வருடத்துக்கு இலங்கைக்கு அனுப்பும் நிதி தொகை, நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 6.8 வீதமென்றும் அதில் 2.7 வீதம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே கிடைக்கப் பெறுகிறது என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சர்ச்சைக்குரிய நிலக்கரி இறக்குமதி; விசாரணை அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 22

நிலக்கரி இறக்குமதி மற்றும் மின் உற்பத்தியின்போது ஒழுங்கற்ற அல்லது சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அடுத்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதியரசர் கிஹான் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளதுடன், உறுப்பினர்களாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் ஆதித்ய பட்டபெந்திகே மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி சஞ்சீவ சோமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவின் செயலாளராக பீ.வீ.பந்துலசேன நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று சேக்ஸ்பியர் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஏப். 22

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில நெறியினரால் இன்று புதன் காலை 8.30 மணிக்கு சேக்ஸ்பியர் நினைவு தினம் அனுட்டிக்கப்பட உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர் சிவசக்தி ஜெயராஜா கலந்து கொள்வார்.

கலாசாலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர்களான வசந்தி வைத்திலிங்கம் சுஜீவா அருள்லிங்கம் ஆகியோர் சேக்ஸ்பியர் படைப்புகள் குறித்த கருத்துரைகளை வழங்குவர். (அ)

# மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 22

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மற்றும் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி டி. எஸ். சூசைதாசன் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.அலெக்ஸ்ராஜா யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இன்று புதன்கிழமை அமுலாகும் வகையில் இந்த இடமாற்றங்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
22.04.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## புத்தாண்டில் மீண்டும் அதிகாரத்துக்கு வருவது பற்றிய மகிந்தவின் பேச்சு

இலங்கையில் இதுகால வரையில் பதவியில் இருந்த அரசாங்கங்களில் மக்கள் கிளர்ச்சி செய்து விரட்டியடித்த அரசாங்கம் தங்களுடையது என்பதை ராஜபக்சாக்கள் அடிக்கடி மறந்துவிடுகிறார்கள் போன்று தெரிகிறது.

சிங்கள - தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச புத்தாண்டில் மீண்டும் அரசியல் அதிகாரத்துக்கு வருவதற்காக தங்களிடம் "முக்கியமான திட்டம்" இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இதுகாலவரை ஆட்சி செய்த பழைய பாரம்பரிய அரசியல் கட்சிகளை எல்லாம் நிராகரித்து தேசிய மக்கள் சக்தியை நாட்டு மக்கள் ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவந்து ஒன்றரை வருடங்கள் தான் நிறைவடைந்திருக்கின்றது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்துடன் வலுவான நிலையில் இருக்கிறது.

பொதுஜன பெரமுன உட்பட எதிரணி அரசியல் கட்சிகளினால் அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு இதுவரையில் உருப்படியான வேலைத் திட்டம் எதையும் வகுக்க முடியவில்லை. தோல்வி நிச்சயம் என்று தெரிந்திருந்த போதிலும், இடைக்கிடை அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதை மாத்திரம் எதிரணி கட்சிகள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றன.

தேசிய தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பது உண்மை என்றாலும், ஆட்சிமுறையில் பல்வேறு நிருவாகக் குறைபாடுகளுக்கு மத்தியிலும், அரசாங்கத்தை மக்கள் பெரிதாக வெறுக்கத் தொடங்கியிருப்பதாக கூறமுடியாது.

பெப்ரவரியில் சிவில் சமூக நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் நாட்டு மக்களில் 65 சதவீதமானவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருப்பதாக கண்டறியப்பட்டிருக்கிறது. அதேவேளை எந்தவொரு எதிரணிக் கட்சிக்கும் மக்கள் ஆதரவு அதிகரித்து வருவதற்கான அறிகுறியையும் காண முடியவில்லை.

நடைமுறை யாதார்த்தம் இவ்வாறிருக்கையில், புத்தாண்டில் பொதுஜன பெரமுன அரசியல் அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கான திட்டம் ஒன்று இருப்பதாக மகிந்த ராஜபக்ச கூறியிருப்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. அத்துடன் தனது தலைமையில் தான் ஆட்சிமாற்றம் இடம்பெறுமென்று அவர் கூறுகின்றரா என்பதும் தெளிவில்லை.

தங்களது ஆட்சிக்காலத் தவறுகளை நாட்டு மக்கள் மறந்து விட்டார்கள் என்று மகிந்த ராஜபக்ச நினைக்கிறார் போலும். இலங்கையின் வரலாற்றில் முன்னரும் வேறு அரசியல் குடும்பங்கள் ஆதிக்கம் செலுத்திவந்தன. அவர்களை மக்கள் தேர்தல்களில் தோற்கடித்தார்கள். ஆனால், மக்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சியில் இருந்து விரட்டியடித்தது ராஜபக்ச குடும்பத்தை மாத்திரமேயாகும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் இதே காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்ததற்கு மூன்று ராஜபக்ச சகோரர்களும் அவர்களுடன் பணியாற்றிய உயர்மட்ட அதிகாரிகளுமே பொறுப்பு என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மக்கள் மறந்திருப்பார்கள் என்று மகிந்த ராஜபக்ச நம்புகிறார் போலும்.

புத்தாண்டில் மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து பேசும் அவர் தங்களிடம் இருக்கும் திட்டத்தை விபரித்துக் கூறவில்லை. நிச்சயமாக தேர்தல் ஒன்று புத்தாண்டில் வரப்போவதில்லை. தேர்தலை தவிர, ஆட்சிக்கு வருவதற்கு ஜனநாயக வழிமுறை வேறு எது? கட்சி மாறல்களை ஊக்குவிக்கும் ராஜபக்ச அரசியல் கலாசாரமும் இன்றைய சூழ்நிலையில் செல்லுபடியாகாது. அவர் சொன்னால்தான் உண்டு... அல்லது ஊகிக்க முடியவில்லை.

எல்லாம் இருக்கட்டும்... ராஜபக்சாக்களுக்கு மீண்டும் ஆட்சியதிகாரம் தேவையாக இருக்கலாம். மக்களுக்கு அவர்களின் ஆட்சி தேவையா?

# இந்திய - இலங்கை உடன்படிக்கையை நிறைவேற்ற இந்தியாவின் தொடர்ச்சியான நெருக்குதலை எதிர்பார்க்கும் தமிழ்க் கட்சிகள்



-மீரா ஸ்ரீனிவாசன்

இலங்கை தமிழர்களின் சம உரிமை மற்றும் கூடுதல் அரசியல் அதிகாரத்திற்கான அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்காக, உள்நாட்டுப் போரின் ஆரம்ப ஆண்டுகளில் கையெழுத்திடப்பட்ட 1987-ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய இந்தியாவின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இலங்கைத் தமிழ் கட்சிகள் கோரியுள்ளன.

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணனிடம், வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் தலைவர்கள் குழு ஞாயிற்றுக்கிழமை இதனைத் தெரிவித்தது.

1987 ஜூலை மாதம் பிரதமர் ராஜீவ் காந்தியும். ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் கைச்சாத்திட்ட இந்த "அரசாங்கங்களுக்கு இடையிலான உடன்படிக்கையை" சுட்டிக்காட்டிய முன்னணித் தமிழ் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி அந்த உடன்படிக்கையின் உண்மையான நோக்கம் இன்னும் எட்டப்படவில்லை என்று குறிப்பிட்டது.

"இந்த ஒப்பந்தம் இதுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை, 13-வது திருத்தத்தின் மூலம் கூட அது முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை என்பதை அவரிடம் தெரிவித்தோம். இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ யார் ஆட்சிக்கு வந்தாலும், இந்த உடன்படிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். அது மாற்ற முடியாத அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு மத்திய கூட்டாட்சி (Federal model) அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்," என்று சந்திப்புக்கு பிறகு தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் "தி இந்து" விடம் தெரிவித்தார்.

2009 மே மாதம் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து தமிழரசு கட்சி மற்றும் அது முன்னர் தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை "ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத" இலங்கைக்குள் 13-வது திருத்தத்தின் ஊடாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை தொடர்ந்து கோரி வந்திருக்கின்றன. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு., கிழக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கான ஒரே சட்ட ரீதியான உத்தரவாதம் இந்த 13ஆவது திருத்தமாகும்.

இருப்பினும், கடந்த நான்கு தசாப்தங்களாக இது முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை.

"மாகாண சபைகள் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக முடங்கிக் கிடப்பதை நாங்கள் சுட்டிக்காட்டியபோது, விரைவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து இலங்கைத் தரப்புடன் பேசியுள்ளதாகத் துணை ஜனாதிபதி எங்களிடம் கூறினார்.

அதிகாரப் பகிர்வு குறித்த இந்தியாவின் நிலைப்பாடு மாறாமல் உள்ளது என்றும் அதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் எங்களுக்கு உறுதியளித்தார்," என்று சுமந்திரன் கூறினார்.

குறைந்து வரும் ஆர்வம்

கடந்த பத்து ஆண்டுகளாக, இந்தியாவின் வளர்ச்சி ஒத்துழைப்பு மற்றும் மூலோபாய முன்னுரிமைகளுக்கு மத்தியில், இலங்கையின் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் ஆர்வம் குறைந்து வருவதாகத் தமிழ் விமர்சகர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். இதற்கிடையில், இந்தியத் தலைமையுடனான ஒவ்வொரு சந்திப்பிலும் தமிழ் அரசியல் கட்சிகள் கவலையை வெளிப்படுத்தி வருகின்றன.

**விரைவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து இலங்கைத் தரப்புடன் பேசியுள்ளதாகத் துணை ஜனாதிபதி எங்களிடம் கூறினார். அதிகாரப் பகிர்வு குறித்த இந்தியாவின் நிலைப்பாடு மாறாமல் உள்ளது என்றும் அதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் எங்களுக்கு உறுதியளித்தார். என்று சுமந்திரன் கூறினார்.**

2022-ஆம் ஆண்டு "தி இந்து" விடம் பேசிய மறைந்த மூத்த தமிழ் தலைவர் ஆர். சம்பந்தன், இலங்கையின் தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவிற்கு "விசேட கடமை" இருக்கிறது என்று கூறியிருந்தார்.

அதிகாரப் பகிர்வு குறித்து இந்தியாவின் கூடுதல் நெருக்குதலைக் கோரும் அதே வேளை, 2015 மார்ச் மாதம் இலங்கை பாராளுமன்றத்தில் பிரதமர் மோடி ஆற்றிய உரையில், தான் "கூட்டுறவு கூட்டாட்சியில் (Cooperative Federalism) ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்" என்று குறிப்பிட்டதை மூத்த தமிழ் அரசியல்வாதியும் தமிழரசு கட்சியின் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை என்ற தங்களது நிலைப்பாட்டை விளக்கும் ஆவணத்தை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், இந்தியத் துணை தூதுவரிடம் கையளித்தார்.

இடதுசாரி அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)) இந்திய - இலங்கை உடன்படிக்கையை இந்தியாவின் தலையீடாகக் கருதி வரலாற்று ரீதியாக எதிர்த்து வந்தாலும், அது தலைமை தாங்கும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி கூட்டணி, தமிழர்களின் அபிலாசைகளை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதாக உறுதியளித்துள்ளது. இருப்பினும், அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை, அதற்கான காலக்கெடுவும் அறிவிக்கப்படவில்லை.

தமிழ்க் கட்சிகள் மற்றும் துணைத் தலைவர் இடையிலான சந்திப்பில் இந்திய நிதியுதவியுடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், தொடரும் மீனவர் பிரச்சினை மற்றும் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. அகதிகள் திரும்புவது குறித்த கேள்விக்கு, அவர்கள் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு இந்தியா ஆதரவளிக்க வாய்ப்புள்ளதாக இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

"அங்கு அவர்களைப் பராமரிக்க இந்தியா பணம் செலவழிக்கிறது, அதற்குப் பதிலாக அவர்களை இங்கே வீடுகள் மற்றும் பிற தேவைகளுடன் குடியமர்த்துவதற்கு அந்த நிதியைப் பயன்படுத்தலாம் என்று அவர் கூறினார்," என சுமந்திரன் தெரிவித்தார்.

(தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



ஏப்ரல் - 22 புதன்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 09
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சஷ்டி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும்.

**சிம்மம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் வளர்ச்சியில் கவனம் தேவை. இவியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**விருட்சிகம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**தனுசு**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிலும் தெளிவு பிறக்கும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் சரக்குகள் விற்றுத் தீரும். வியாபாரத்தில் லாபம் பெருகும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

# ஈஸ்டர் தாக்குதல் 7 ஆண்டு நிறைவு; நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம்

மட்டக்களப்பு, ஏப். 22

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று 07 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் அதற்கு நீதி கோரி நேற்று கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்றது.

மட்டக்களப்பு அரசடி கல்லடி பாலத்து அருகில் உள்ள ஈஸ்டர் படுகொலை ஞாபகார்த்த தூபியில் நேற்று காலை மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்புக்கள், மதத் தலைவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

குண்டு தாக்குதலில் உயிரிழந்த, பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் என பெருமளவானோர் இதில் கலந்துகொண்டனர்.




இதன்போது நினைவுத் தூபியில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை உறுதி செய், குற்றவாளியை பொறுப்பு கூறுவதற்கு வழியேற்படுத்து, ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்புமிக்க வெளிப்படைத்தன்மையான விசாரணை வேண்டும் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# வவுனியாவில் டித்வா புயலினால் சேதமுற்ற வீடுகளுக்கு காசோலை

வவுனியா, ஏப். 22

வவுனியா மாவட்டத்தில் டித்வா புயல் காரணமாக பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட செயலக மண்டபத்தில் இடம் பெற்றிருந்தது.

பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கான நிவாரணமாக, ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ரூபா 5 இலட்சம் ரூபா வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் கட்டமாக ரூபா 3 இலட்சம் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் 669 பேருக்கு இந்த காசோலை வழங்கப்படவுள்ளது.

அதன் ஒரு பகுதியாக நேற்று



செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட 476 பேரில் முதற் கட்டமாக 131 பேருக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் கே.சுலோஜினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் நா.கமலதாசன், செட்டிகுளம் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# "கடிவாளமிட்ட கற்பனை" கவிதை நூல் வெளியீடு

வடமராட்சி, ஏப். 22

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு, பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. நிருஷாராணி பூங்குன்றனின் "கடிவாளமிட்ட கற்பனை" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா கரணவாய் மூத்தவிநாயகர் திருமண மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ம.ப.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் ந.திருலிங்கநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் இ.பிரதாபன், வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு மதி. ச.லதுமீரா மற்றும் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி.சி.நித்தியா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



மேற்படி கவிதை நூலை பருத்தித்துறை பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் வெளியீட்டு வைக்க முதல் பிரதியை சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி.ச.லதுமீரா பெற்றுக்கொண்டார்.

நூலின் வெளியீட்டுரையையும் நயப்புரையையும் யாழ். பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு கற்கைகள் பீடத்தின் இறுதியாண்டு மாணவி செல்வி. சோகினி கிருபாகரன் நிகழ்த்தினார். (அ-02)

# புதுவருட கொண்டாட்டங்களின்போது எலிக் காய்ச்சல் பரவும் அபாய நிலை!

கொழும்பு, ஏப். 22

புத்தாண்டு காலங்களில் நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டுகளின்போது, எலி காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பெரும்பாலான புத்தாண்டு நிகழ்வுகள் நீர் நிலைகள், சிறிய குளங்கள் மற்றும் வயல்வெளிகளுக்கு அருகாமையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இவ்வாறான பகுதிகளில் விளையாட்டுகளில் ஈடுபடுவது எலி காய்ச்சலை உண்டாக்கும் கிருமிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தி, நோய் பரவும் வாய்ப்பை அதிகப்படுத்துவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுமக்கள் கடும் காய்ச்சல் மற்றும் தசை வலி ஆகிய அறிகுறிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேர்தல் சட்ட சீர்திருத்தங்களில் அரசு, எதிரணி அசமந்தப்போக்கு!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் விசனம்

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தேர்தல் சட்ட சீர்திருத்தங்களை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் காட்டி வரும் அசமந்தப்போக்கு துரதிர்ஷ்டவசமானது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், சுமார் 20 முக்கிய சட்ட சீர்திருத்தங்கள் குறித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜனாதிபதி மற்றும் நீதியமைச்சருடன் பலமுறை



பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தபோதிலும், தற்போதைய நிலையில் அந்த நடைமுறைகள் மீண்டும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக, பணி நிமித்தம் அல்லது உடல்நிலை காரணமாக வாக்களிக்க முடியாதவர்களுக்கு மாற்று வழிமுறைகளை உருவாக்குவது போன்ற 20 இற்கும் மேற்பட்ட சீர்திருத்தங்களை ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

பாராளுமன்றத்திற்குச் சென்று சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் தமக்கு இல்லை எனச் சுட்டிக்காட்டிய தலைவர், தேர்தல் சட்டங்களை நவீனமயமாக்குவது குறித்து ஆளும் தரப்போ அல்லது எதிர்க்கட்சியோ பாராளுமன்றத்தில் குரல் கொடுக்காமை கவலையளிப்பதாகத் தெரிவித்தார். (அ)

# தேசிய அபிவிருத்தி வங்கியில் மோசடி; கணக்காய்வுக்கு சர்வதேச நிறுவனம்!

## மத்திய வங்கி தீர்மானம்

கொழும்பு, ஏப். 22

தேசிய அபிவிருத்தி வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 1,320 கோடி ரூபா பாரிய நிதி மோசடி குறித்து முழுமையான தடயவியல் கணக்காய்வை முன்னெடுப்பதற்கு சர்வதேச நிறுவனம் ஒன்றை நியமிக்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளுக்கு மேலதிகமாக இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வங்கியின் சில ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மோசடியைக் கண்டறியத் தவறியமை குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், சர்வதேச நிபுணர்களைக் கொண்ட நிறுவனம் ஊடாக வங்கியின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் நிர்வாகத் தோல்விகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த விசாரணையின் முன்னேற்ற அறிக்கைகள் நேரடியாக மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்கப்படும்.

இதேவேளை, வங்கியின் உள்நாட்டுக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துமாறும், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்ய ஒரு சுயாதீன மூன்றாம் தரப்பு மீளாய்வை முன்னெடுக்குமாறும் மத்திய வங்கி உத்தரவிட்டுள்ளது.

எனினும், வைப்பாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், நிதித் தொகுதியின் ஸ்திரத்தன்மைக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை எனவும் மத்திய வங்கி பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளது. (அ)

# புத்தாண்டு காலத்தில் அதிவேக வீதிகள் மூலம் 441 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானம்!

கொழும்பு, ஏப். 22

கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலான புத்தாண்டு காலப்பகுதியில், நாட்டின் அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பின் ஊடாக 441 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் மொத்தம் 1,170,830 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் அனுராத ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு வெளிச் சுற்று வீதி, கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, மத்திய அதிவேக நெடுஞ்சாலை ஆகியவற்றில் இந்த வருமானங்கள் ஈட்டப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலங்களில் மக்கள் அதிகளவில் பயணங்களை மேற்கொண்டமையே இந்த வருமான அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தனியார்துறையில் பெண் ஊழியர்கள் பங்களிப்பை அதிகரிக்க அரசு திட்டம்!

கொழும்பு, ஏப். 22

தனியார்துறையில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், பிரசவ காலச் சலுகைகளுக்கான செலவுகளைப் பகிர்ந்து கொள்ளும் புதிய காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தத் தொழில் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போதைய நடைமுறைப்படி, பெண் ஊழியர்களின் பிரசவ கால விடுமுறை மற்றும் கொடுப்பனவுகளைத் தொழில் வழங்குநர்களே முழுமையாக ஏற்கவேண்டியுள்ளதால், பெண்களைப் பணியமர்த்தத் தனியார் நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருகின்றன.

இந்த நிலையை மாற்றி, குறித்த செலவுகளை அரசாங்கமும் தொழில் வழங்குநரும் இணைந்து காப்புறுதித் திட்டத்தினுடாகப் பகிர்ந்துகொள்ளும் புதிய முறைமை குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தொழிற் சங்கங்கள் மற்றும் தொழில் வழங்குநர்களுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில், பெண் தொழிலாளர் படை நாட்டின் பொருளாதாரத்தில் அதிகளவில் பங்களிப்புச் செய்ய வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# நிலக்கரி ஊழல் உண்மைகளை அரசினால் மறைக்கமுடியாது!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 22

நிலக்கரி இறக்குமதி விவகாரத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பான உண்மைகளை தேசிய தணிக்கை அலுவலகத்தின் அறிக்கையிலிருந்து அரசாங்கத்தினால் மறைக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு முதல் நிலக்கரி கொள்வனவு குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு, தணிக்கை அறிக்கையின் தரவுகளைப் புறக்கணிக்க முடியாது என அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக, 2025/2026 காலப்பகுதிக்கான நிலக்கரி கொள்வனவு ஒப்பந்தத்தை, முறையான பதிவுகளைக் கொண்டிராத "ட்ரைடென்ட் சேம்பர்" என்ற இந்திய நிறுவனத்திற்கு எரிசக்தி அமைச்சு மற்றும் நிலக்கரி நிறுவனம் வழங்கியுள்ளதாக தணிக்கை அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அடிப்படைத் தகுதிகளைக் கூட பூர்த்தி செய்யாத ஒரு நிறுவனத்திற்கு இவ்வளவு பெரிய ஒப்பந்தத்தை வழங்கியது யார் என்பதைக் கண்டறிவது ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு கடினமான காரியமல்ல என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமலை-கல் ஓயா இணைப்பு ரயில் மிகமோசமான நிலையில்

## பயணிகளின் சுகாதாரமும் பாதுகாப்பும் கேள்விக்குறி



திருமலை, ஏப். 22

திருகோணமலைக்கும் கல் ஓயா சந்திக்கும் இடையில் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பயணிகளுக்காக இயக்கப்படும் இணைப்பு ரயில் சேவையானது, தற்போது மிகவும் மோசமான நிலையில் இயங்கி வருவதாக பயணிகள் கடும் விசனம் தெரிவித் துள்ளனர்.

ரயிலின் மலசல கூடம் பயன்படுத்தவே முடியாத அளவுக்கு துருப்பிடித்து, சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகிறது.

உள்ளே நுழைய முடியாத அளவுக்கு வீசும் துர்நாற்றம் மற்றும் முறையற்ற நீர் விநியோகம் என்பன பயணிகளை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளன.

சேவையிலிருந்து நீக்கப்பட வேண்டிய பழமையான பெட்டிகளே இச்சேவையில் பயன்படுத்தப்படுகின்றன.

இருக்கைகள் கிழிந்தும் அழுக்கடைந்தும் காணப்படுகின்றன. இரண்டாம் வகுப்பு பெட்டிகளில் கால்களை வசதியாக வைக்க முடியாத அளவுக்கு இருக்கைகள் நெருக்கமாக உள்ளன.

பல பெட்டிகளில் கதவுகள் இல்லாமலும், ஜன்னல்களை மூட முடியாத நிலையிலும் இருப்பதால் பயணிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

திருகோணமலை ரயில் நிலைய அதிபர் மற்றும் ரயில் திணைக்கள அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்தி, தரமான பெட்டிகளை இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பயணிகள் வலியுறுத்துகின்றனர்.

(அ)

# சாய்ந்தமருது உணவகங்களில் தொடர்ச்சியான பரிசோதனை

அம்பாறை, ஏப். 22

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட உணவகங்கள் தொடர்ச்சியாக பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த பரிசோதனைகளின் போது மனித நுகர்வுக்கு தகுதியற்ற உணவுப் பொருள்கள் கண்டறியப்பட்டதுடன் அவை பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு உடனடியாக அவ்விடத்திலேயே அகற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மேலும் விற்பனையாளர்களுக்கு சுகாதார விதிமுறைகள் உணவு பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் சுத்தமான சூழல் பராமரிப்பு குறித்து தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

பொதுமக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பது தொடர்பில் இவ்வாறான பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்பதை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் அறிவுறுத்தியுள்ளார்.

(அ)



# கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சித்திரை புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு



கல்முனை, ஏப். 22

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் 2026 ஆம் ஆண்டிற்கான சித்திரை புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் பொலிஸ் நிலைய திறந்த வெளியரங்கில் நடைபெற்றன.

குறித்த நிகழ்வு சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் நெறிப்படுத்தலில் நடைபெற்றதுடன் கல்முனை தலைமையக பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச் செயலாளர் எம்.ஐ .எம் ஜிப்ரி (எல்.எல்.பி) உள்ளிட்ட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்கள் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.எல்.லசந்த களு ஆராச்சி நினைவுச் சின்னங்கள் வழங்கினார்.

(அ)

# பெண்களைக் காயப்படுத்திய விமானப்படை சிப்பாய் கைது!

கொழும்பு, ஏப். 22

காணியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்கள் இருவரை தாக்கி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய விமானப்படை சிப்பாய் ஒருவரை அநுராதபுரம் மிஹிந்தலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் பனாவெவ, சீப்புக்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மிஹிந்தலை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 33 வயதுடையவர், சீப்புக்குளம், பனாவெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# குருக்கள்மடம் மனிதப் புதைகுழியில் மே 14, 15, 16, 17 திகதிகளில் ஸ்கானிங்!

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் மனித புதைகுழி உள்ளதாக சந்தேகிக்கப்படும் இடத்தில்-ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு ஸ்கானிங் சோதனைகளுக்கு உட்படுத்தப்படாத பிரதேசத்தில் எதிர்வரும் மே மாதம் 14, 15,16 மற்றும் 17 திகதிகளில் ஸ்கானிங் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

1990 ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுதத்தாரிகளால் இடைமறிக்கப்பட்டு மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியில் பதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி-

இந்த வழக்கில் கடந்த 31.03.2026 அன்று இந்த வழக்கின் பிரத்தியசக முறைபாட்டாளர் நீதிமன்றில் நகர்த்தல் பிரேரணை வாயிலாக அணுகி அப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட மூன்று இடங்களில் இரண்டு இடங்களில் மாத்திரம் ஸ்கான் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும் ஒரு இடம் ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் அந்த குறித்த பிரதேசத்தை ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அதனை அகழ்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்குரிய கட்டளை ஆக்குமாறும் நீதிமன்றை வேண்டி இருந்தார்.

அதன் அடிப்படையில் குறித்த அந்த ஸ்கானிங் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இந்த வழக்கின் பிரத்தியேக முறைப்பாட்டாளர் தனது சொந்தச் செலவில் இருந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தனியார் நிறுவனம் ஒன்றை அணுகி அந்த ஸ்கான் பரிசோதனையை செய்வதற்கும் அதன் பின்னர் அங்கே ஏதாவது எச்சங்கள் காணப்படுமாக இருந்தால் அதனை அகழ்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நேற்று முன் தினம் நீதிமன்றில் கட்டளை ஆக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் அடையாளம் காணப்பட்டு ஸ்கானிங் சோதனைகளுக்கு உட்படுத்தப்படாத பிரதேசத்தில் எதிர்வரும் மே மாதம் 14, 15,16 மற்றும் 17 திகதிகளில் ஸ்கானிங் நடவடிக்கைகளும், ஏதாவது எச்சங்கள் இருக்குமாக இருந்தால் அதனை அகழ்வதற்கான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன-என்றார்.

(அ)

# செட்டிபாளையம் ம.வி.யில் 12 அடி உயர சரஸ்வதி சிலை!

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் 2017 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தர சாதாரண தரத்தில் கற்ற மாணவர்களின் அனுசரணையில் அமைக்கப்பட்ட 12 அடி உயரம் கொண்ட சரஸ்வதி சிலை நேற்று முன் தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வித்தியாலய பிரதி அதிபர் திருமதி சு.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்வி பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.


இதன்போது காரைதீவு பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் பிரணவரூபன், மற்றும் முன்னாள் அதிபர் அருள்ராசா, பெற்றோர், ஆசிரியர்கள், மாவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட 12 அடி உயரமுடைய சரஸ்வதி சிலை பூர்வாங்க கிரியைகள் நடைபெற்று அதிதிகளால் திரை நீக்கம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

(அ)

# ஈரானியப் போர்க் கப்பல் திருகோணமலையில் தரிப்பு



திருமலை, ஏப். 22

இந்தியாவிலிருந்து ஈரான் நோக்கிப் பயணித்தபோது இயந்திரக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்த ஈரானியப் போர்க்கப்பல், கொழும்புத் துறைமுகத் திலிருந்து திருகோணமலைத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட் டது.

திருகோணமலை வெளித் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்ட இக்கப்பல் பின்னர் உள் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டு தற்போது அங்கு தரித்து நிற்கின்றது. இக்கப்பலில் பயணித்த ஈரானியக் கடற்படையினர் ஏற்கனவே விமானம் மூலம் ஈரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீதி நிலைநாட்டுவதில்...

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், ஏழு ஆண்டுகள் கடந்தும், இந்த கொடூர தாக்குதலுக்குப் பின்னால் இருந்த உண்மையான சூத்திரதாரிகள் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என கவலை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நீதியை நிலைநாட்டும் வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அவை அரசியல் தேவைகளுக்காக விசாரணைகளை திசைதிருப்பியதாக இதன்போது அவர் குற்றம் சுமத்தினார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்-

தாக்குதல் தொடர்பான முன்கூட்டிய எச்சரிக்கைகளை கவனிக்கத் தவறிய அதிகாரிகள் மற்றும் அதனை மூடிமறைத்தவர்கள் மீதான சட்ட நடவடிக்கை இன்னும் மந்த கதியிலேயே உள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்தாலும், அவை இன்னும் கீழ்மட்டத்திலேயே இருக்கின்றன. தாக்குதலில் முன்னோடியாக செயற்பட்டவர்களைக் கண்டறிய இன்னும் தீவிர நடவடிக்கைகள் தேவை.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளில் இன்னும் பகிரங்கப்படுத்தப்படாத பகுதிகள் மற்றும் இரகசிய ஆவணங்கள் குறித்து அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவேண்டும்.

விசாரணைகளுக்கு இடையூறாக இருக்கும் அல்லது கடந்த காலங்களில் தகவல்களை மறைத்த பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் இன்னும் உயர் பதவிகளில் நீடிப்பது விசாரணைகளின் சுயாதீனத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.

நீதியை நிலைநாட்டும் விடயத்தில் அரசாங்கம் அசமந்தப் போக்குடன் செயற்பட்டால், சர்வதேச விசாரணையை கோருவதே சரியான வழி. இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்காகவும், காயமடைந்தவர்களுக்கும் திருச்சபை என்றும் துணை நிற்கும் - என்றார். (அ)

## பாதிப்புற்ற குடும்பங்கள்...

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைத் தாக்குதலின் 07 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற விசேட நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி மார்க்-ஆண்ட்ரே பிரெஞ்ச் கலந்துக்கொண்டார்.

இந்த ஆராதனையில் கலந்துகொண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று 07 வருடங்கள் நிறைவடைந்ததை நினைவு கூர்ந்த அவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி மற்றும் உண்மையை வெளிப்படுத்துவது குறித்து முக்கிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அதன்படி, தாக்குதல் நடந்து ஏழு வருடங்கள் கடந்துள்ள போதிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் முழுமையான நீதியை எதிர்பார்த்து காத்திருப்பது கவலைக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் யார் என்பது குறித்தும், அதற்கான உண்மையான காரணங்கள் குறித்தும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

ஏழு ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருப்பது கவலைக்குரியது. உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நட்டஈடு வழங்கும் பொறிமுறையில் இலங்கை அரசாங்கத்திற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபை எப்போதும் தயாராகவுள்ளது.

இலங்கையில் இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் தனது ஒத்துழைப்பை வழங்கும்.

இந்தத் துயரமான தருணத்தில் இலங்கை மக்கள் அனைவரும் மத மற்றும் இன வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்-என்றார். (அ)

## பரந்தன் விபத்தில்...

55 வயதான புன்னைநீராவி கண்ணகை புரத்தை சேர்ந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## உண்மையான குற்றவாளி...

எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தாக்குதல்களுக்கு நிதியளித்தமை உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் பாதுகாக்கப்படுவதாகவும், இச் சந்தர்ப்பத்தில் ஏனையவர்கள் இலக்கு வைக்கப்படுவதாகவும் நாமல் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்ட போதும், ஒரு தனிப்பட்ட கொலை வழக்கில் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் நாமல் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், விசாரணைகளை நடத்துபவர்களின் நம்பகத்தன்மை சந்தேகத்திற்குரியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தாக்குதல்களுடன் ராஜபக்ஷ குடும்பத்தைத் தொடர்புபடுத்தும் குற்றச்சாட்டுகளை நாமல் நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில், நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை நடத்துமாறு அதிகாரிகளிடம், நாமல் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## வடக்கு - கிழக்கு...

எனதும் சிறீதரனதும் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னார். ஆழமான விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வீட்டுக்கு வீடு கட்சிகள் உருவாகிவிட்டன. மாவட்டத்துக்கு மாவட்டம், மாகாணத்துக்கு மாகாணம் என ஒவ்வொரு கட்சிகள் உருவாகிவிட்டன. அவர்களுக்கு எத்தனை கட்சி உள்ளன என உண்மையில் தெரியாது. இது ஆரோக்கியமானது அல்ல என்பது அனுபவம் உள்ள -அரசியல் ஞானம் உள்ள ஒரு பெரிய கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக -அமைச்சரவை உறுப்பினராக இருந்த ஒருவரின் வாயிலிருந்து வருகிறது என்று சொன்னால் அதில் நாங்கள் அவதானமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர் கூறிய கருத்தை மக்களுக்கு சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் சந்திப்பு மிக ஆரோக்கியமானது. எமது கருத்துக்களை சொல்லக்கூடியதாக இருந்தது. நமது பிரச்னைகளை உணர்ந்து கொள்ளக் கூடிய தமிழன் என்று வகையில் அவரது அனுபவம் நன்றாக இருந்தது. அரசியலமைப்பு சம்பந்தமாக மட்டுமல்ல மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாகவும் நாம் தெரிவித்தோம். அந்த அடிப்படையில் தொடர்ந்து பதவியில் இருந்து கொண்டு இருக்கிறேன். ஆகவே அந்த அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை தெரிவித்தேன். அதை அவர் ஜனாதிபதியோடு பேசியதாகவும் சொல்லியிருக்கிறார்.

தெளிவாக சமஷ்டியை நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம் - என்றார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல்...

உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் நடந்த விதம் எம்மால் ஒருபோதும் மறக்க முடியாத ஒன்று. கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் குண்டு வெடித்த அன்று நாம் அந்த இடத்திற்குச் சென்றோம். அங்குள்ள மக்களின் வேதனையை நாங்கள் எமது கண்களால் பார்த்தோம். அதன் பின்னர் சியோன் தேவாலயத்திற்கும் கொச்சிக்கடை தேவாலயத்திற்கும் சென்றோம். அப்பாவி மக்களின் வேதனையை நாம் அங்கு உணர்ந்தோம். எமது நாட்டு மக்கள் எவ்வளவு துயரங்களை அனுபவித்தார்கள் என்பதை நாம் கண்டோம். அதன் பிறகு நீர்கொழும்பு மருத்துவமனைக்கும் சென்றோம். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அப்பாவி மக்களின் வேதனையை நாம் அனுபவித்தோம்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தின நினைவேந்தலின் போது, இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்பாக தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என ஜனாதிபதி கூறியிருந்தார். இன்று 2026 ஏப்ரல் 21, ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. இந்த அரசாங்கத்திடமிருந்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

யாரைக் கைது செய்தாலும் பரவாயில்லை, அதன் உண்மையான சூத்திரதாரியைக் கைது செய்யுமாறே நாங்கள் கூறுகிறோம். ஆனால், தற்போது நடப்பது என்னவென்றால், சிலரைக் கைது செய்வதும் பின்னர் அவர்களை விடுவிப்பதுமே ஆகும். சஹ்ரான் போன்றவர்களுக்கு இப்ராஹிம் நானா பணம் செலவழிக்கவில்லை என்பது போலவும், அவர்களின் புதல்வர்கள் குண்டு வெடித்துத் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்பது போலவும் இந்த அரசாங்கம் நடந்துகொள்கிறது.-என்றார். (அ)

## மாகாணத் தேர்தலை...

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அந்தத் தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மனிதாபிமானமற்ற கொடூரச் செயலால் ஆயிரக்கணக்கான மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் எமது கட்சி என்றும் ஆதரவை வழங்கும்

அத்துடன், இக்குற்றத்தைச் செய்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு மரண தண்டனை உள்ளிட்ட உரிய தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் தமது கட்சி எவ்வித நிபந்தனையுமின்றி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

இச்சம்பவத்தின் பின்னால் உள்ள உண்மை கண்டறியப்படாமல் இருப்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தோல்வியாகும். அரசாங்கம் இதனைச் செய்யத் தவறினாலும், இது குறித்து உண்மையான அக்கறையுடன் செயற்படும் ஏனைய தரப்புகளுக்குத் நாம் ஆதரவு வழங்குவோம்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்கு மேல் கடந்துள்ள போதிலும், தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

ஜனாதிபதி தனது அரசியல் வாழ்க்கையில் பெரும் சவால்களை எதிர்கொண்டு முன்னேறியவர் என்பதால் சகல விடயங்களையும் அவர் நன்கு அறிவார். செய்ய முடிந்த காரியங்களைச் செய்ய வேண்டும் அல்லது முடியாதவற்றை முடியாது என்று வெளிப்படையாகக் கூற வேண்டும்.

இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகளின் போதும் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரும்போது நாடு பிரிக்கப்படப் போகிறது என்ற சந்தேகம் சிங்கள மக்கள் மத்தியில் நிலவுகிறது.

இருப்பினும், நாட்டைப் பிரிக்காமல் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த முடியும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்காக நாம் முன்வைக்கும் சமஷ்டி கோரிக்கையை ஒருபோதும் கைவிடத் தயாரில்லை.

அண்மையில் இலங்கைத் தமிழரசு கட்சி உள்ளிட்ட மூன்று கட்சிகள் ஒன்றிணைந்து சந்தித்தபோதும், நாட்டைப் பிரிக்காமல் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்டவேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டையே வலியுறுத்தினோம். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சப்படுகிறது.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் எவ்வித அதிகாரத்தையும் பகிர்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பதை ஆளுநர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் உறுதிப்படுத்துவதாகவும், மாகாண சபைத் தேர்தல் முறைமையின் ஊடாகத் தமிழ் மக்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது-என்றார். (அ)

## போதைப்பொருள்...

மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில் அவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மூவரிடமிருந்தும் 2கிராம் 380 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் , மூவரையும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## பிரேமலால் ஜயசேகர...

கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி ரவீந்திர பிரேமலால் உள்ளிட்ட அதிகாரிகள் அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கிக்காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் 2025ஆம் ஆண்டுடன் காலாவதியாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

2015 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் போது நபரொருவரை சுட்டுக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றங்களுங்காக பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி மரண தண்டனை விதித்து மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மரண தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவரையும் குற்றமற்றவர்கள் என விடுவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐரோப்பிய ஒன்றிய...

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளான வி.எஸ். நிரஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜா ஆகியோர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"செம்மணிப் புதைகுழியில் தற்போது அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், அந்தப் பகுதியை மட்டும் பார்வையிட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் விரும்பவில்லை. அகழ்வுப் பணிகள் நேரடியாக இடம்பெறும்போது நேரில் வருகை தந்து பார்வையிடுவதே பொருத்தமாக இருக்கும் என அவர்கள் கருதுகின்றனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அதன் பின்னரே ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்கள் வருகை தரும் உத்தியோகபூர்வ திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தின் அனுமதி இப்போதும் அமுலில் உள்ள நிலையில், அகழ்வுப் பணிகளின் ஆரம்பத்துடன் சர்வதேசக் குழுவின் இந்த விஜயம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொடிகாமம் பொலிஸ்...

நிலையத்தின் பின்புறமாக உள்ள வெற்றுக்காணிக்குள் சந்தேகத்திற்கு இடமான முறையில் பொதி ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் பொதியை மீட்டு சோதனை செய்தனர்

அதற்குள் 10 கிலோ கேரளா கஞ்சா காணப்பட்டுள்ளது. அதனை மீட்டு பொலிஸ் நிலையம் எடுத்து சென்ற பொலிஸார், அது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# கால்நடை வளர்ப்பவர்கள் காரைநகரில் போராட்டம்!

## கட்டுப்பாடுகளை தளர்த்தக் கோரி



யாழ்ப்பாணம், ஏப். 22

கால்நடை வளர்ப்போர் மீது திணிக்கப்படும் கடுமையான கட்டுப்பாடுகளினால் பண்ணையாளர்கள் நாளாந்தம் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் குறித்த பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கக் கோரியும் காரைநகர் கால்நடை வளர்ப்போர் சுயாதீனக் குழு அடையாளப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

காரைநகர் பிரதேச செயலகம் முன்பாக நேற்று முற்பகல் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டகாரர்கள் கூறுகையில் -

நாங்கள் விவசாயிகளுக்கு எதிரானவர்கள் அல்லர். கமநல சேவைத் திணைக்களம் கமநலக் குழு மற்றும் காரைநகர் பிரதேச சபை என்பனவே இந்த ஒடுக்குமுறைகளுக்கு முக்கியமானவர்களாக இருக்கின்றனர்.

2025 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் காலபோக நெற்செய்கைக்காக கட்டப்பட்ட கால்நடைகள் அவிழ்த்து விடுவதற்கான அனுமதிகள் இன்னும் கிடைக்கவில்லை.

ஒரு சில விவசாயிகள் மேற்கொள்ளும் சிறுதானிய செய்கைக்காக தொடர்ச்சியாக கட்டி வைக்கப்படுகின்றன.

கடுமையான வெப்பம் காரணமாக தண்ணீர் பற்றாக்குறை நிலவுகின்ற சூழ்நிலையிலும், ஒழுங்கான மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தினாலும் தொடர்ச்சியாக கால்நடைகளைக் கட்டி வளர்ப்பது முடியாத விடயமாக உள்ளது.

அதேநேரம் சிறுதானியம் விதைப்பவர்களுக்கு வேலிகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.


இந்த தடையைக் காரணம் காட்டி, சிறு தானியம் செய்கை பண்ணப்படாத இடத்திலும் மற்றும் கடற்கரையோரமாகவும் மேயும் கால்நடைகளை கைப்பற்றி, கமநலக் குழுவும் மற்றும் காரைநகர் பிரதேச சபையும் பெருந்தொகைப் பணம் அறவீடு செய்வது அநீதியானதாகும்.

கால்நடை வளர்ப்போருடன் கலந்துரையாடாமல், விவசாய சம்மேளனமும், பிரதேச சபையும் ஏதேச்சாதிகாரமாக தண்டப்பணத்தை அறவிடுகின்றன.

கால்நடை வளர்ப்போர் ஏழைகளாக இருப்பதினால், தண்டப்பணத்தை கட்டுவதற்காக தமது கால்நடைகளை விற்பனை செய்வதற்கு தள்ளப்படுகின்றனர்.

இது, காரைநகரில் கால்நடை வளர்ப்பை இல்லாமல் ஒழிக்கும் உள்நோக்கம் கொண்டதாகும் - என்றனர். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 7ஆண்டு பூர்த்தி; பல தேவாலயங்களில் விசேட ஆராதனைகள்




கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று நேற்றுடன் 7 ஆண்டுகள் பூர்த்தியாகிய நிலையில் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்தவர்களுக்காக நாட்டின் பல்வேறு தேவாலயங்களிலும் விசேட ஆராதனைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான இலக்காக காணப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் பிரதான ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது.

அத்துடன் உயித்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நேற்று காலை 8.45 மணிக்கு அனைத்து தேவாலயங்களிலும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான இலக்காக காணப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் பிரதான ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மற்றுமொரு இலக்காக காணப்பட்ட நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்திலும் நேற்று காலை ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது.

உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் இதில் கலந்து கொண்டனர்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இலக்குவைக்கப்பட்ட மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும் நேற்று காலை ஆராதனை நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் மட்டக்களப்பு நகரில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முப்படையினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர். மட்டக்களப்பு பிள்ளையாரடியில் உள்ள சீயோன் தேவாலயத்திலும் ஆலய பங்குத் தந்தை ரோஷன் மகேசன் தலைமையில் இன்று விசேட ஆத்ம சாந்தி திருப்பலி பூஜை வழிபாடுகள் இடம் பெற்றது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்தவர்களுக்காக நாட்டின் பல்வேறு தேவாலயங்களிலும் விசேட ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ)

# தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் நிறைவு!


சென்னை, ஏப். 22

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவுக்கு வந்தன. 2026 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து அனைத்து கட்சிகளும் தங்களது தீவிர பிரசாரத்தை முன்னெடுத்திருந்தது.

நாளை தேர்தல் நடைபெறும் நிலையில் நேற்று அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நிறைவுக்கு வருகின்றன.

மேலும் தொலைகாட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் எந்தவித தேர்தல் விளம்பரங்களையும் ஒலி, ஒளி பரப்ப தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து கட்சிகளும் தங்களது இறுதி கட்ட பிரசாரத்தை நேற்று முன்னெடுத்தன.

# யாழ்ப்பாணத்திலும் நேற்று ஈஸ்டர் தாக்குதல் நினைவு



யாழ்ப்பாணம், ஏப். 22

2019ஆம் ஆண்டு உயிர்ப்பு ஞாயிறன்று இலங்கையின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் 07ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்டத்தில் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் யாழ்.மரியன்னை பேராலய வளாகத்தில் உள்ள ஆயர் இல்ல சிற்றாலய முன்றலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் சுடரேற்றப்பட்டு வழிபாடும் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளாரால் அஞ்சலி உரையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இறைமக்களென பலரும் கலந்து இறந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர். (அ)

# ஒரே நாளில் 396 பேர் கைது!

கொழும்பு, ஏப். 22

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் திங்கள்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 396 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

அத்துடன், 25,683 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ள துடன், 25 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்ப ட்ட பிடியா ணைகளுக்கமைய 191 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 91 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, மதுபோதை யில் வாகனம் செலுத்திய 67 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 51 பேரும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். (அ)

# யாழில் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்!

யாழ்ப்பாணம், ஏப். 22

இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கழக மண்டபத்தில் பேராலய பங்குத்தந்தை தலைமையில் இன்றைய தினம் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ். நீரிழிவு கழகமும் கிறீன்பீல்ட் சனசமூக நிலையமும் இணைந்து குறித்த முகாமையை நடத்தவுள்ளன. குறித்த முகாமில் இலவச பரிசோதனைகளாக நீரிழிவு பரிசோதனை,இரத்த அழுத்தம், காது பரிசோதனை, உடல்திணிவுச்சுட்டி, வைத்திய ஆலோசணைகள்,கண் பரிசோ தனை ஆகிய பரிசோதனைகள் மேற்கொள் ளப்படவுள்ளன. அத்துடன் இலவசமாக நீரிழிவு கைநூல் வழங்கப்படும். அனைவரும் கலந்து பயன்பெறுமாற நீரிழிவு கழகம் மற்றும் கிறீன்பில்ட் நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# எரிபொருள் கியூ.ஆர். முறை காலவரையறையின்றி நீடிப்பு

கொழும்பு, ஏப். 22

உலக சந்தையில் நிலவும் எரிபொருள் விலையேற்றம் மற்றும் விநியோகத் தடைகளுக்கு மத்தியில், நாட்டில் எரிபொருளை முறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கியூ. ஆர். குறியீட்டு முறைமை காலவரையறையின்றி தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையை அடுத்து, எரிபொருள் சிக்கன நடவடிக்கையாக அரசாங்கம் மீண்டும் கியூ.ஆர் குறியீடு முறையை நடைமுறைப்படுத்தியது.

இது குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவிக்கையில்-

உலகளாவிய எரிபொருள் நெருக்கடி இன்னும் முடிவுக்கு வரவில்லை. எனவே, தற்போதைய கியூ.ஆர் குறியீட்டு முறையின் கீழேயே சில்லறை எரிபொருள் விநியோகம் தொடரும். எவ்வாறாயினும், தேவைக்கேற்ப இந்த முறையில் மாற்றங்கள் செய்யப்படும்.

எதிர்காலத்தில் கொடுப்பனவு முறைகளை முழுமையாக டிஜிற்றல் மயமாக்குதல், வாகனங்களின் வகைகளுக்கு ஏற்ப வழங்கப்படும் எரிபொருள் அளவை அவ்வப்போது திருத்தம் செய்தல், சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு எரிபொருள் மானியங்களை வழங்குவது குறித்து பரிசீலித்தல் போன்ற திட்டங்கள் அமுல்படுத்தப்படும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org